**வட மாகாணத்தின் போசாக்கு மட்டத்தினை மேம்படுத்துவதற்கான உள்நாட்டு மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டத்தின் 2015 சனவரி 31 இல் முடிவடைந்த 13 மாத காலப்பகுதிக்கான நிதி கூற்றுக்கள்**

---

வட மாகாணத்தின் போசாக்கு மட்டத்தினை மேம்படுத்துவதற்கான உள்நாட்டு மட்ட போசாக்கு தலையீட்டு செயற்திட்டத்தின் 2015 சனவரி 31 இல் முடிவடைந்த 13 மாத காலப்பகுதிக்கான நிதி கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 சனவரி 31 ஆம் திகதிய ரீஎவ் 097171 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.04 (சீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்**

---

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின்படி, வட மாகாண சபையின் சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் பெண்கள் மற்றும் ஐந்து வயதிற்கு குறைந்த சிறுவர்கள் என்பவர்களுக்கிடையான ஊட்டக்குறைவு வீதத்தை குறைப்பதன் மூலம் இலங்கையின் வட மாகாணத்தில் இடம் பெயர்ந்த மக்களிற்கான உலக உணவு மற்றும் நிதி நெருக்கடியின் கூட்டுத் தாக்கத்தை குறைப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 2.7 மில்லியனுக்கு சமமான ரூபா 300.5 மில்லியனாக உள்ளதுடன் செயற்திட்டத்தின் மொத்த கிரயமானது ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்தால் (ஜேஎஸ்டிஎவ்) நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 சனவரி 31 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 சனவரி 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 செயற்திட்டத்தின் நடவடிக்கைகள்**

---

பகுதி 1 **அவசர உணவுப் பங்கீட்டு அட்டைகளின் விநியோகம்**

---

செயற்திட்டத்தின் ஆரம்ப 6 மாத காலத்தின் போது, இடம்பெயர்ந்த மக்கள் உள்ளூரில் மீளக்குடியமரும் மற்றும் தங்கியிருக்கும் குடும்பங்களுடன் வாழ்கின்றவர்களிற்காக வடக்கு மாகாணத்திலுள்ள கிராமங்களில் பின்வரும் தொகுதியினருக்கு ஆகார சக்தி மற்றும் புரத உணவுகளை (அரிசி மற்றும் தானியவகை) அதிகரிப்பதற்கான அவசர உணவுப் பங்கீட்டு ஏற்பாடுகள்.

i) போசாக்கு குறைந்த கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் / அல்லது போதிய நிறையில்லாதிருக்கின்ற கர்ப்பிணிப் பெண்கள்

ii) பாலூட்டும் பெண்கள் (பிரசவித்து 6 மாதங்கள் வரை)

iii) தங்கியிருக்கும் குடும்பங்களுடன் வாழ்கின்ற காயப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள்

iv) வளர்ச்சி குன்றிய, ஆளுமை குன்றிய மற்றும் அனுபவத்தில் குறைந்த போசாக்குள்ளவர்களென வகைப்படுத்தப்பட்ட 5 வயதிற்கு குறைந்த சிறுவர்கள்

v) தங்கியிருக்கும் குடும்பங்களுடன் வாழ்கின்ற காயமடைந்த சிறுவர்கள்

**பகுதி 2 இயலளவை கட்டியெழுப்பலும் சமுதாய தயார்படுத்தலும்**

---

செயற்திட்டத்தின் ஆரம்ப 6 மாத காலத்தின் போது:

i) கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நுண்பாக போசாக்கு குறைநிரப்புகளின் உள்வாங்குதல் என்பவற்றில் முறையான குழந்தைகள் மற்றும் இளம் பால்குடி சிறுவர்கள் மற்றும் பாதுகாப்பான செய்முறைகளை ஊக்குவிப்பதற்கான அடிப்படைப் போசாக்கு, போசாக்கு பழக்கவழக்க மாற்றங்கள் மற்றும் சமுதாய தயார்படுத்தல் என்பவற்றில் சமுக தன்னார்வலர்கள், சுகாதார தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் தொகுதியின் உறுப்பினர்கள் என்போரின் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி.

ii) நிறையளக்கும் தூண்களிற்காக அடிப்படை உபகரணங்களை வழங்கல் (உயரம் மற்றும் நிறையை அளவிடும் உபகரணம் மற்றும் வளர்ச்சியை கண்காணிக்கும் அட்டவணை) மற்றும் சேதமடைந்த தூண்கள் மற்றும் உள்ளூர் சிகிச்சை நிலைய பகுதிகளில் சிறிய திருத்தங்கள் மற்றும் புதுப்பித்தல்களை மேற்கொள்ளல்.

iii) கலாச்சார ரீதியான முறையான பழக்கவழக்க மாற்ற தகவல் தொடர்பு பொருட்களின் அபிவிருத்தி மற்றும் அச்சிடல், மற்றும்

iv) போசாக்கினை அதிகரிப்பதற்கான சமுதாய தயார்படுத்தல்.

**பகுதி 3 சமுதாய – அடிப்படை போசாக்கு தலையீடுகள்**

---

பின்வரும் ஒவ்வொரு மாவட்டங்களிலும், தன்னார்வலர்கள், பொது சுகாதார தாதிமார் மற்றும்/ அல்லது உள்ளூர் சுகாதார பதவியணியினர் என்போர் ஊடான ஏற்பாடுகள்,

i) ஊட்டச்சத்துக் குறைந்த கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்களிற்கு ஊக்கமிக்க நடத்தை மாற்றத்திற்கான ஆலோசனை வழங்கல்,

ii) தாய்மார் மற்றும் 5 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் பாதுகாவலர்களிற்கான வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் ஊக்குவிப்பு.

iii) ஆபத்திலுள்ள தாய்மார் மற்றும் சிறுவர்களிற்கு குறைநிரப்பு ஊட்டல் மற்றும் வீட்டிற்கு வருகைதரல், மற்றும்

iv) உரிய போசாக்கு நடைமுறைகள் மற்றும் சுகாதார முக்கியத்துவங்கள் என்பவற்றை ஊக்குவிப்பதற்கு கர்ப்பிணி பெண்கள் மற்றும் சிறு குழந்தைகளின் தாய்மார்களிற்காக நடத்தைப் போக்கினை மாற்றும் அமர்வுகளை ஒழுங்கமைத்தல். அந்த அமர்வுகள் கணவன்மார், மாமியார்கள் மற்றும் வயதுவந்த பெண்பிள்ளைகள் என்பவர்களையும் இலக்கு வைப்பதாக இருக்க வேண்டும்.

**பகுதி 4 செயற்திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு, மதிப்பாய்வு மற்றும் பரிந்துரைத்தல்**

---

i) மாகாண மட்டத்திலிருந்து மாவட்ட மற்றும் கிராம மட்டம் வரையான மேற்பார்வை உள்ளடங்கலாக செயற்திட்ட முகாமைத்துவ பகுதிகளில் பெறுனர்களிற்கு ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பில் ஆதரவளித்தல், மற்றும்,

ii) போசாக்கு முயற்சிகளிற்கான அதிகரித்த ஆதரவு மற்றும் நீண்ட கால போசாக்கு தலையீடுகளின் நிகழ்ச்சித்திட்ட பின்பற்றுதல் என்பவற்றிற்காக மாகாணசபை மூலம் பரிந்துரைத்தல் மற்றும் வளத் தயார்படுத்தலிற்கான ஆதரவளித்தல்.

**1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.5 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில்

நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்குகின்றனவா என்பதும்,

(இ) ஜப்பான் சமூக அபிவிருத்தி நிதியத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 சனவரி 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2015 சனவரி 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக நிதியளித்தல் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பொது திறைசேரியின் 2002 நவம்பர் 28 இன் ஐஏஜே/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 1989 நவம்பர் 19 இன் 842 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி செயற்திட்டத்தால் ரூபா 61,517,143 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்காக தனியானதொரு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்படு**

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 சனவரி 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடை முகவர் | 2.73 | 300.48 | 60 | 22.76 | 2.73 | 339.8 |
| **மொத்தம்** | **2.73** | **300.48** | **60** | **22.76** | **2.73** | **339.8** |

**3.2 பௌதீக செயலாற்றல்**

செயற்திட்டமானது வட மாகாணத்தின் இடம்பெயர்ந்த மக்களிடையேயான ஊட்டக்குறைவு வீதத்தினை குறைக்கும் நோக்கில் இலக்கிடப்பட்ட 9,000 கர்ப்பிணித் தாய்மார்கள் , 5,000 பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதிற்கு குறைந்த 11,000 குழந்தைகளுக்கு சத்துணவு (ஜீவபோசா) வழங்கும் செயன்முறையில் ஈடுபட்டிருந்தது. இதனால் , செயற்திட்டத்தின் கீழ் 6,084 கர்ப்பிணித் தாய்மார்கள், 5,404 பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 11,478 குழந்தைகள் போஷிக்கப்பட்டிருந்தனர்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது அதன் இறுதிக் காலகட்டத்தில் 2 வயதிற்கு குறைந்த குழந்தைகளுக்கு மாத்திரம் உணவினை வழங்கத் தீர்மானித்திருந்ததுடன், இதன் விளைவால் 2-5 வயது வீச்செல்லைக்குட்பட்ட குழந்தைகள் செயற்திட்டத்தால் போஷிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது மீளாய்வாண்டினுள் மோட்டார் வாகனங்கள், அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் அச்சு பொருட்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்யும் நோக்கில் ரூபா 16.08 மில்லியன் தொகையினை செலவிட்டிருந்ததுடன், இவை நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட நோக்கத்துடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வட மாகாணத்தின் மாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்தின் வாகன அணியானது 08 மோட்டார் வாகனங்களை கொண்டமைந்திருந்ததெனினும், 2014 யூன் 30 ஆம் திகதி போசாக்கு தலையீட்டு நிகழ்சித்திட்டங்களை மேம்படுத்தும் பொருட்டு செயற்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மானியத்தில் ரூபா 9.4 மில்லியன் கிரயமுடைய வான் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மருந்துப்பொருட்களை விநியோகிப்பதற்காக பயன்படுத்தப்படும் உறைகளை விநியோகித்தல், அச்சிடல் மற்றும் கட்டுதல் போன்றவற்றிற்கான செலவினங்களுக்காக மாகாண சுகாதார அமைச்சின் பாதீட்டினூடாக தனியான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும் செயற்திட்டமானது குறித்த செலவுகளுக்காக ரூபா 1.39 மில்லியன் தொகையினை செலவிட்டிருந்தது. எனினும், உறைகளை விநியோகித்தல், கையிலுள்ள இருப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாடற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 6.65 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 100 வயதுவந்தோருக்கான மற்றும் 80 குழந்தைகளுக்கான உயரம் மற்றும் நிறை அளவை தராசுகள், உயிரியல் மருத்துவ பொறியியளாளர்களால் அளவுத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் இவ் இலத்திரனியல் உபகரணங்களை இயக்குவதில் அலுவலகர்களுக்கு காணப்பட்ட பரிச்சயமின்மை போன்ற காரணங்களால் மருத்துவ அலுவலகர்களின் அலுவலகங்களில் 2 வருடங்களுக்கு அதிகமாக குறைப்பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளில் ரூபா 5.3 மில்லியனிற்கு கொள்வனவு செய்யப்பட்டு 23 சுகாதார மருத்துவ அலுவலகர்களின் அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட 105 அரைக்கும் மோட்டார் அரைக்கும் இயந்திரங்கள் மூவழி மின் விநியோகத்தில் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டமானது குறித்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் உணவு பதப்படுத்தும் நோக்கத்திற்காக அவ்விடத்திலுள்ள மூலப்பொருட்களின் கிடைத்தகுதன்மையினைக் கருத்திற்கொண்டிருக்கவில்லை.